# அல்–இஜ்திஹாத்

# இஸ்லாத்தின் மூலாதரங்கள்

- அடிப்படை மூலாதாரம்: அல்குர்ஆன், அஸ்ஸுன்னா
- துணை மூலாதாரம்: இஜ்மா, கியாஸ், இஸ்திஹ்ஸான்...
- அடிப்படை மூலாதாரம்: அல்லாஹ்வினால் இறக்கப்பட்டது
- துணை மூலாதாரம்: இஜ்திஹாத் மூலம் பெறப்பட்டது

# இஜ்திஹாத்

- மொழிக்கருத்தில்: முயற்சித்தல்
- பரிபாசைக் கருத்தில்: அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் தீர்வு கிடைக்காத பிரச்சினையொன்று தோன்றும்போது அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் ஆழமான அறிவுள்ளவர்கள் அவ்விரண்டையும் அடிப்படையாக வைத்துத் தீர்வினைப் பெறுவதற்காக மேற்கொள்கின்ற ஆய்வு

# ஷரீஆவில் இஜ்திஹாத்

- இஜ்திஹாத் செய்து தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதை இஸ்லாமிய ஷரீஆ அனுமதிக்கின்றது.
- முஆஸ்பின் ஜபல் (ரழி) அவர்களை யமனுக்கு கவர்ணராக அனுப்பும்போது புதுப் பிரச்சினைகள் தோன்றும்போது இஜ்திஹாத் செய்து தீர்வு வழங்குவேன் என்று கூறியதை நபியவர்கள் அங்கீகரித்து வாழ்த்தி அனுப்பினார்கள்

# ஷரீஆவில் இஜ்திஹாத்

- “விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்கு வழிப்பட்டு நடவுங்கள். அவ்வாறே அல்லாஹ்வுடைய தூதருக்கும், உலுல் அம்ர்களுக்கும் வழிப்பட்டு நடவுங்கள். (4:59)
- உலுல் அம்ர்: முஜ்தஹித்

# முஜ்தஹித்

- இஜ்திஹாத் பணியில் ஈடுபடுவோர் முஜ்தஹித் என அழைக்கப்படுவர்.
- முஜ்தஹித்கள் பல தகுதிகளைப் பெற்றிருக்கவேண்டும்
- முஜ்தஹித்கள் தக்வாவும் நன்னடத்தையுமுள்ள முஸ்லிம்களாக இருப்பதுடன்
  - நுண்மதி
  - அரபு மொழியில் பாண்டித்தியம
  - அல்குஉஆன் ஸுன்னாவில் ஆழமான அறிவு,
  - அவற்றுடன் தொடர்புடைய கலைகளில் நிபுணத்துவம்
  - முன்னய முஜ்தஹித்களின் இஜ்திஹாத் பற்றிய விளக்கம், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பிரச்சினைகள் பற்றிய தெளிவு

# இஜ்திஹாதிற்கான கூலி

- ஒரு முஜ்தஹித் இஜ்திஹாத் செய்து அவரது முடிவு சரியாக அமைந்தால் அவருக்கு இரண்டு கூலிகள் உண்டு. இஜ்திஹாத் செய்து அவரது முடிவு பிழையாக அமைந்துவிட்டால் அவருக்கு ஒரு கூலி உண்டு (புஹாரி)

# மதிப்பீட்டு வினாக்கள்

1. இஜ்திஹாத் எனும் பதத்தை வரைவிலக்கணப்படுத்துக
2. இஸ்லாத்தில் இஜ்திஹாதின் அவசியப்படுவதற்கான காரணங்கள் இரண்டு தருக
3. முஜ்தஹித் என்போர் யார்?
4. இஜ்திஹாத் அனுமதிக்கப்பட்ட ஒரு விடயம் என்பதை எடுத்துக்காட்டும் ஓர அல்குர்அன் வசனத்தை எழுதுக
5. முஜ்தஹித்கள் பெற்றிருக்கவேண்டிய பண்புகளைப் பட்டியல்படுத்துக.